3. அறிக்கைகள் அளித்தல்

(அ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல், திரு. லா. சந்தானம்.*

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல், திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்)*

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் குறித்து மத்திய அரசு வெளியிட்ட ஆணை—தொடர்ச்சி

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. G.O.-வை வெளியிடுங்கள். G.O.-வை வெளியிடுங்கள்.

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் G.O.-வை திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களிடம் கொடுத்தார்கள்.)

டாக்டர் க. பொன்முடி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குரிய விளக்கம் சொல்லப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்)

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. Point of order. சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த பாயின்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

2005 பிப்ரவரி 7] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அலுவலகம் அனுப்புகின்றபோது எந்த நாள், எந்தத் தேதி அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அன்றையதினமே உடனடியாக ஃபேக்ஸ் அனுப்புவார்கள். இந்த விஷயத்தில் 31 ஆம் தேதி இந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது உண்மையானால், ஏன் உடனடியாக ஃபேக்ஸ் அனுப்பவில்லை?

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி., சொல்லிவிட்டார்கள், விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். சொல்லுங்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர்.பி., அரசாணையை முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திருமதி வளர்மதி ஜெபராஜ்.

(திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

3. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2005 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து இரண்டாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.